# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அனைத்துலகத் தேர்வு

# 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100



TEDC

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. 'கௌ' என்பது

அ) உயிரெழுத்து ☐ ஆ) மெய்யெழுத்து ☐

இ) உயிர்மெய்யெழுத்து ☐ ஈ) ஆய்தவெழுத்து ☐

2. நன்னூல் என்பது

அ) அறநூல் ☐ ஆ) இலக்கியநூல் ☐

இ) இலக்கணநூல் ☐ ஈ) இசைநூல் ☐

3. சிலப்பதிகாரம், வாழ்த்துப்பாடலில் ____________ப் போற்றப்படுகின்றது.

அ) இறைவனை ☐ ஆ) மன்னனை ☐

இ) தேவரை ☐ ஈ) இயற்கையை ☐

4. செயப்படுபொருள் குன்றிய வினையடி

அ) எழுது ☐ ஆ) நீராடு ☐

இ) குடி ☐ ஈ) நடி ☐

5. ____________ மறந்தால் ஊரிலே உறவென்று எவருடனும் கொண்டாட முடியாது.

அ) தாய்மொழியை ☐ ஆ) வாழிடமொழியை ☐

இ) பொதுமொழியை ☐ ஈ) வேற்றுமொழியை ☐

6. யாழ்ப்பாணத்தில் இலவய நூல் நிலையம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1933 ☐ ஆ) 1923 ☐

இ) 1981 ☐ ஈ) 1943 ☐



TEDC

7. பாடினாய் என்பது

அ) முன்னிலைப்பன்மை ☐ ஆ) முன்னிலைஒருமை ☐
இ) தன்மைஒருமை ☐ ஈ) படர்க்கைஒருமை ☐

8. இராவணனின் தந்தை

அ) இந்திரசித்து ☐ ஆ) வீடணன் ☐
இ) கும்பகண்ணன் ☐ ஈ) வச்சிரவாவு ☐

9. கழகவிலக்கியங்கள் குறைந்த சொல்லாட்சியுடன் காணப்படுவதன் கரணியம்

அ) குறுகிய எழுத்து ☐ ஆ) ஏட்டெழுத்து ☐
இ) நீண்ட எழுத்து ☐ ஈ) ஒற்றெழுத்து ☐

10. இன எழுத்து இல்லாத எழுத்துக் கூட்டம்

அ) வல்லினம் ☐ ஆ) உயிரினம் ☐
இ) இடையினம் ☐ ஈ) மெல்லினம் ☐

11. இராவண காவியத்தை எழுதியவர்

அ) புலவர்குழந்தை ☐ ஆ) கண்ணதாசன் ☐
இ) கம்பர் ☐ ஈ) வால்மீகி ☐

12. மாதவி தனது நடன அரங்கேற்றத்தில் ஆடிய கூத்துவகை

அ) 10 ☐ ஆ) 2 ☐
இ) 12 ☐ ஈ) 11 ☐

13. **தொடர்துன்பம்** என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும். ☐

ஆ) யானைக்கும் அடி சறுக்கும். ☐

இ) பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும். ☐

ஈ) ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறது. ☐

14. சேரநாட்டின் இன்றைய பெயர்

அ) தமிழ்நாடு ☐ ஆ) நாஞ்சில்நாடு ☐

இ) கன்னடநாடு ☐ ஈ) கேரளநாடு ☐

15. யாழ்நூலகத்தின் முன்றலில் நிறுவப்பட்டுள்ள படிமம்

அ) மலைமகள் ☐ ஆ) கலைமகள் ☐

இ) அலைமகள் ☐ ஈ) வீரமகள் ☐

16. உண் என்பதன் பிறவினை

அ) உண்பி ☐ ஆ) உண்வி ☐

இ) உண்டான் ☐ ஈ) உண்பித்தான் ☐

17. பெருமதிப்புக்குரிய தமிழரின் முதற்கல்

அ) வைரக்கல் ☐ ஆ) மாணிக்கக்கல் ☐

இ) நடுகல் ☐ ஈ) சிற்பக்கல் ☐

18. ‘‘எண்ணிக்குழிவெட்டி, இடுப்பொடிஞ்சு நிக்கையிலே .... ’’எனும் பாடல்

அ) தாலாட்டு ☐ ஆ) தொழிற்பாட்டு ☐

இ) காதற்பாட்டு ☐ ஈ) ஒப்பாரி ☐

19. மாதவி அரங்கேறிய அகவை

அ) பதினைந்து ☐ ஆ) பன்னிரண்டு ☐

இ) பத்து ☐ ஈ) பதினாறு ☐

20. நடுநடுங்கி என்பது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) இரட்டைக்கிளவி ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

21. அண்ணுதல் என்பது

அ) பிரிதல் ☐ ஆ) பொருந்துதல் ☐

இ) அழைத்தல் ☐ ஈ) வருந்துதல் ☐

22. இராவணனைக் காட்டிக் கொடுத்தவன்

அ) கும்பகண்ணன் ☐ ஆ) காக்கைவன்னியன் ☐

இ) வீடணன் ☐ ஈ) வச்சிரவாவு ☐

23. உவமைத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) அத்தி பூத்தாற்போல ☐ ஆ) பிஞ்சில் பழுத்தல் ☐

இ) வாழையடிவாழையாக ☐ ஈ) பவளவாய் ☐

24. தெரு + ஓரம் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) தெருவோரம் ☐ ஆ) தெருவ்ஓரம் ☐

இ) தெருஓரம் ☐ ஈ) தெருவ்வோரம் ☐

25. இந்திரவிழா கொண்டாடப்பட்ட நகரம்

அ) பூம்புகார் ☐ ஆ) மதுரை ☐

இ) தகடூர் ☐ ஈ) வஞ்சி ☐

26. விரும்பினான் என்ற வினைமுற்றின் வினையடி

அ) விரும்ப ☐ ஆ) விரும்பி ☐

இ) விரும்பு ☐ ஈ) விரும்பிய ☐

27. காதற்பாடலில் சந்தன மரத்துக்கு ஒப்பிடப்படுபவர்

அ) தலைவன் ☐ ஆ) தலைவி ☐

இ) ஊர்ப்பெண்கள் ☐ ஈ) பழந்தமிழ்ப்பெண்கள் ☐

28. காலங்காட்டும் விகுதிமறைந்து வரும் பெயரெச்சம்

அ) உம்மைத்தொகை ☐ ஆ) வினைத்தொகை ☐

இ) வேற்றுமைத்தொகை ☐ ஈ) அன்மொழித்தொகை ☐

29. முன்றில் என்பது

அ) முற்றம் ☐ ஆ) அரங்கு ☐

இ) சந்தி ☐ ஈ) நிலம் ☐

30. எழுவாய் வேற்றுமை என்பது

அ) இரண்டாம் வேற்றுமை ☐ ஆ) ஐந்தாம் வேற்றுமை ☐

இ) முதலாம் வேற்றுமை ☐ ஈ) எட்டாம் வேற்றுமை ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இலங்கையில் மிகப்பழங்காலந் தொட்டே தமிழர் என்ற ஓர் இனம் வாழ்ந்து வருகிறது. இதற்குச் சான்றாக எலும்புக்கூடுகளும் கல்வெட்டுகளும் ஈமத்தாழிகளும் விளங்குகின்றன. ஆனால் இன்று தமிழரின் தொன்மங்களைச் சிதைத்து அவர்களின் அடையாளங்கள் சிங்கள அரசினால் அழிக்கப்படுகின்றன. இவற்றை அழிப்பதன் மூலம் தமிழரின் வரலாற்றை மறைக்க முற்படுகின்றது இன்றைய அரசு. அரசின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளாத தமிழினம் அதன் வலைக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. இவ்வுலகில் வாழும் இனங்கள் யாவும் தத்தமது வரவாற்று அடையாளங்கள் அழிந்து போகாமல் பேணிப் பாதுகாத்து வருகின்றன. ஆனால் எமது தாயகத்தில் எமது அடையாளங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் எவரும் பெருமளவில் ஈடுபடவில்லை. தாயகத்தில் வாழும் தமிழர்கள் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களும் இணைந்து தமிழரது வரலாற்று அடையாளங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். இதுவே எமது வரலாற்றுக் கடமையுமாகும். தமிழரின் தொன்மங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டால் தமிழருக்கு என்றொரு நாடோ அடையாளமோ இல்லாமல் போய்விடும். எனவே புலம்பெயர் நாட்டில் வாழும் இளையோர் எமது வரலாற்று அடையாளங்களைக் காப்பதில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. இலங்கையில் பழங்காலத்திலிருந்தே தமிழர் வாழ்ந்தமைக்கான சான்றுகள் எவை?

2. தமிழரின் அடையாளங்கள் இன்று யாரால் அழிக்கப்படுகின்றன?

3. தமிழரின் தொன்மங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டால் என்ன நிகழும்?

4. தமிழரது வரலாற்றுக் கடமை யாது?

5. யார் எமது வரலாற்று அடையாளங்களைக் காப்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்?

புள்ளிகள் 10



TEDC

3) **பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. செங்குட்டுவன், இளங்கோவடிகள் ஆகிய இருவரும் கண்ணகி வாழ்வில் எவ்வகையில் இடம்பெறுகின்றனர்?

2. யாழ்நூலகம் எரியூட்டி அழிக்கப்பட்டது ஏன்?

3. ''நானும் கொஞ்சம் ஏழையடி, நடவு கொஞ்சம் செறுத்துப்போடு'' இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

4. புலம்பெயர் தமிழர் தமிழை விட்டுவிடாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அம்பி கூறுகிறார்?

5. அ) ''எம் தமிழர் மூதாதை; குன்றெடுத்த தோளான்'' எனப் பாடியவர் யார்? ________

   ஆ) யாரைப் புகழ்ந்து பாடியுள்ளார்? ________

6. தலைக்கோல் என்பது என்ன?

7. 'மானிடா சொல்' என்ற கவிதையை எழுதியவர் யார்?

புள்ளிகள் 10



TEDC

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



அன்பாய் என்றும் வாழ்ந்திட
அறிவால் என்றும் வென்றிடு

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

அடுக்கிடுக்குத்தொடர் ______________________

இடுகுறிப்பெயர் ______________________

உருவகஅணி ______________________

2. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

கூற்றுச்சொல்லியம் ______________________

கூட்டுச்சொல்லியம் ______________________

3. இடைநிலைகளைக் கண்டறிந்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| கண்டான் | __________ | குரைக்கின்றன | __________ |
| உறங்கினான் | __________ | வாங்குவான் | __________ |
| நடிப்பான் | __________ | பாய்ந்தன | __________ |

4. பின்வரும் சொற்களை வைத்து சொல்லியம் எழுதுக.

வலி ______________________

வளி ______________________

5. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

6 ஆம் வேற்றுமைத்தொகை ______________________

2 ஆம் வேற்றுமைத்தொகை ______________________

7 ஆம் வேற்றுமைத்தொகை ______________________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

குழந்தைத் தொழிலாளர் என்பது குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துவதைக் குறிக்கின்றது. பெரும்பாலான நாடுகளில் சட்டத்திற்கு மாறாகக் குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பன்னாட்டு நிறுவனங்களில் இக்கொடுமை இடம்பெறுகிறது. உலகில் ஏற்பட்டுள்ள கல்விமுறை மாற்றம், தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்பன குழந்தைகளின் உரிமை தொடர்பான எண்ணங்களை மாற்றியுள்ளது. பள்ளிப்பணி, வீட்டுப்பணி தவிர வேறு பணிகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தக்கூடாது என ஒன்றிய நாடுகள் அவையின் குழந்தைத் தொழிலாளர் சட்டம் கூறுகிறது. இன்று பரவலாகத் தொழிலாலைகள், சுரங்கங்கள், உணவுப்பொருள் விற்பனை, சுற்றுலா வழிகாட்டி, அங்காடிகளில் பொருட்களை அடுக்குதல், துப்பரவுப்பணி போன்றவற்றில் குழந்தைகள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். உலகம் முழுவதும் ஐந்து முதல் பதினான்கு அகவை வரையான 158 மில்லியன் சிறுவர்கள் பணி செய்வதாக ஒன்றிய நாடுகள் அவை ஆய்வு கூறுகிறது.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- யாழ்நூலகம்

- அறிவியல் வளர்ச்சியும் இன்றைய உலகமும்
  - உலகநாடுகளின் கண்டுபிடிப்புகள்.
  - அவற்றால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்.

- தாயகத்தின் விடுதலையும் இளையோரின் பங்களிப்பும்

புள்ளிகள் 20



TEDC

TEDC